**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 217/2021**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோகரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சங்கரன் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | சங்கரன்கோவில் | வயது | : | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 24th, 2025.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் அச்சன்புதூர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது, காவல் நிலைய குற்றஎண்.234/2017 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு,

22.10.2017ம் தேதி வழக்கின் சம்பவயிடத்தை பார்வையிட்டதில் எனக்கு முந்தைய அதிகாரி பார்வை மகஜர் மற்றும் வரைபடம் சரியாக இருந்ததினால் நான் தனியாக எதுவும் தயார் செய்யவில்லை. பின்பு, அன்றைய தினம் சாட்சிகள் ஆண்டனி ரமேஷ், கமலக்கண்ணன், பத்மராஜ், பழனிவேல்ராஜன், ஜெயராமன், நெல்லைய்யா, சக்திவேல், சோகன், திருமலைக்குமாரசாமி, இசக்கி, ராதாகிருஷ்ணன், மாடசாமி, தளவாய்ராசு ஆகியோர்களை விசாரித்ததில், அவர்கள் முந்தைய ஆய்வாளர்கள் மீனாட்சிநாதன், பாலமுருகன் ஆகியோர்களிடம் கூறியதை

போல் என்னிடமும் கூறியதினால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

தொடர்ந்து, இவ்வழக்கின் தடய அறிவியல் ஆய்வக துணை இயக்குநர் சாட்சி திருநாவுக்கரசு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, தடய அறிவியல் அறிக்கை பெற்றேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.12** ஆகும். பின்பு, 05.04.2018ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் சொரிமுத்து, செங்கோட்டை நீதித்துறை நடுவர் நீதிமன்ற தலைமை எழுத்தர் விஜி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். திருநெல்வேலி துணை இயக்குநர் அலுவலரிடம் கருத்துரை பெற்றேன். அந்த சட்ட கருத்துரை **அ.சா.ஆ.13** ஆகும்.

சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்து வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 353, 506(2) இதச மற்றும் பிரிவு 25(1)(A) Arms Act & Sec 5 Indian Explosive Substancial Act–லிருந்து மாற்றம் செய்து சட்டப்பிரிவுகள் 294(பி), 353, 506(2) இதச மற்றும் பிரிவு 25(1)(A), 29(B), 30 Arms Act & Sec 5 Indian Explosive Substancial Act–ன் படி சட்ட மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடமிருந்து வழக்கு தொடர்வதற்காக முன் அனுமதி பெற்று, 27.03.2019 ம் தேதி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக தலைமை உதவியாளர் திருமதி.பாலசாந்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, முன் அனுமதி அறிக்கை பெற்றேன். அந்த முன் அறிக்கை **அ.சா.ஆ.15** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>1 முதல் 5 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

முதல் தகவல் அறிக்கை 04.08.2017 அன்று காலை 11.00 மணிக்கு தான் பதிவு செய்யப்பட்டதாக துலங்கும் என்றால் சரிதான். வழக்கு விசாரணையை நான் 22.10.2017 அன்று காலை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். நேரம் வழக்கு கோப்பில் துலங்காது. சான்று பொருட்கள் காலை 08.30 மணிக்கு சேவல்காடு ரோட்டில் வைத்து கைப்பற்றப்பட்டதாக வழக்கு கோப்பில் துலங்குமா? என்றால் நான் சான்று பொருட்களை கைப்பற்றவில்லை. அத்தாட்சி சம்பவயிடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சி காலை 10.00 மணிக்குள் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

முதல்தகவல்அறிக்கை காலை 11.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு தயாரித்ததாக கூறப்பட்ட அத்தாட்சியில் முதல்தகவல்அறிக்கை எண் மற்றும் குற்றப்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே, எப்படி குற்ற எண் மற்றும் முதல்தகவல்அறிக்கை எண் அத்தாட்சியில் குறிப்பிடப்பட்டது என்று விசாரித்தேனா? என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் "என்னை கூட்டிச்சென்றால் மறைத்து வைத்திருக்கும் பொருட்களின் இடத்தை அடையாளம் காட்டுகிறேன்" என்று காளிமுத்து கூறவில்லை என்றால் சரிதான். எனவே, ஒப்புதல் வாக்குமூலம் அனுமதிக்கபடக்கூடியதில்லை என்றால் சரியல்ல.

முதல்தகவல்அறிக்கையில் ஆய்வாளர் மீனாட்சிநாதன் அவருடன் ரோந்து வந்த காவலர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல்தகவல்அறிக்கையில் சம்பவ சாட்சிகளின் பெயர்

குறிப்பிடாத நிலையில் எவ்வாறு சம்பவ சாட்சிகளை அடையாளம் கண்டு விசாரித்தேன் என்றால் முந்தைய ஆய்வாளர்கள் விசாரித்துள்ளார்கள். ரோந்திற்கு சென்ற காவல் அதிகாரிகளின் பாக்கெட் டைரியை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

படிவம் 95ன் படி அத்தாட்சி தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சி 3 நகல்கள் எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட பொருட்களை நிலைய பாராவிடம் ஒப்படைத்ததாக புலன் விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 4 வரையிலான எதிரிகளிடமிருந்து எந்த வகையான துப்பாக்கிகளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட துப்பாக்கி சீல் செய்யப்பட்டதாக புலன் விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பட்ட காலதாமதம் விளக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

சான்று பொருட்கள், சான்றாவணங்கள் போலியாக தயார் செய்வதற்கு ஏற்பட்ட காலதாமதத்தினால் தான் முதல்தகவல்அறிக்கை நீதிமன்றத்திற்கு காலதாமதமாக அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. சான்று பொருட்கள் நீதிமன்றத்திலிருந்து திருப்பபெற்ற பிறகு 17.08.2017 வரை யாருடைய பாதுகாப்பில் சான்று பொருட்கள் இருந்தது என்றால் காவல்நிலைய பாதுகாப்பில் இருந்தது. கிராமங்களில் கிணறு தோண்டுவதற்காக வெடிபொருட்கள் உபயோகப்படும் என்றாலும், அந்த வெடிபொருட்களை பயன்படுத்தி இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

எதிரிகள் ஏசியதினால் அ.சா.1 மற்றும் இதர நபர்களுக்கு அவமானம் எற்பட்டதாக முதல்தகவல்அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புலன் விசாரணையில், அன்றைய தினம் காவல் அதிகாரிகள் எந்த வேலைக்கு பணிக்கப்பட்டார்களோ, அந்த பணியை முடித்து விட்டதாக துலங்கும் என்றால் சரிதான். எதிரிகள் போலீசாரின் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாக புலன் விசாரணையில் துலங்காது என்றால் சரியல்ல. எதிரிகள் ஆயுதம் வைத்திருந்ததாக கூறப்பட்டிருந்தாலும், குற்றமுறு செய்கை எதுவும் அவர்கள் செய்யவில்லை என்றால் சரியல்ல.

1 முதல் 5 எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ஆகஸ்ட்–15ம் தேதி சுதந்திர தினத்திற்காக துப்பாக்கி உரிமை பெற்ற 5ம் எதிரியின் துப்பாக்கியை ஆய்விற்காக பெற்று, அதை கொண்டு செல்வதற்காக அவருடைய ஆம்னி வேனை வாங்கிச் சென்று இந்த வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகளுக்கும், சான்று பொருட்களுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. விளம்பரத்திற்காகவும், புள்ளி விபரக்கணக்கிற்காகவும் எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>6ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் இதர எதிரிகளின் வாக்குமூலத்தை பார்த்து குற்றப்பத்திரிக்கை தயார் செய்தேன் என்றால் சரிதான். 6ம் எதிரியின் பெயர் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரியை இந்த வழக்கில் கைது செய்யவில்லை என்றால் சரிதான். அவரிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 6ம் எதிரிக்கு துப்பாக்கி லைசென்ஸ் உள்ளது என்றால் சரிதான். CRPC 154 ன்

படி எழுத்து மூலமாகவோ, வாய்மொழியாகவோ சொன்னால் தான் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யமுடியும் என்றால் சரியல்ல.

மீனாட்சிநாதன் புகார் கொடுக்கவில்லை என்றால் தனிஅறிக்கை கொடுத்துள்ளார். எதிரி ஆழ்வாரின் ஒப்புதல் வாக்குமூலத்தின், எதிரி காளிமுத்துவை காசிதர்மத்தில் இறக்கி விட வந்தபோது, பிடித்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முதல்தகவல்அறிக்கையில் எதிரிகள் துப்பாக்கி வைத்துக்கொண்டு வேனில் இருந்து இறங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் துப்பாக்கிகள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல்தகவல்அறிக்கையில் துப்பாக்கியின் தோட்டா எண் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். வாக்குமூலங்கள் சாட்சிகள் சொல்ல சொல்ல புலன் விசாரணை அதிகாரி பதிவு செய்ய வேண்டும் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் அனைத்தும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சிகளின் வாக்குமூலங்கள் அவர்கள் சொல்லி பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேலதிகாரிகளின் உத்தரவின் பேரில், ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகள் வேட்டையாடியதை பார்த்ததாக சாட்சிகள் எவரும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், சொன்ன நேரத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

6ம் எதிரிக்கு சொந்தமான உரிமம் உள்ள துப்பாக்கியை சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆய்விற்காக வாங்கி சென்று விட்டு, பொய்யாக

வழக்கு தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து, புள்ளி விபரக்கணக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அத்தாட்சிகள் அனைத்தும் தயார் செய்த பின்பு தான் முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மீனாட்சிநாதனின் அரசு பணி பாதிக்கப்பட்டதாக முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.29 17:11:20 +0530